Australian Government
Department of Immigration and Border Protection

# Operation Sovereign Borders

## தகவல் ஏடு

ஆஸ்திரேலிய அரசாங்கம் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கவும் ஆட்கடத்தலை முறியடிக்கவும் கடுமையான எல்லைப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது.

### Operation Sovereign Borders என்பது என்ன?

Operation Sovereign Borders என்பது, ஒஸ்திரேலிய அரசின் படைத்துறையின் முனைப்பில் செயல்படுகின்ற எல்லைப் பாதுகாப்பு, வள்ளங்களைத் தடுப்பதும், மக்களது வாழ்வு கடல் ஆபத்தில் சிக்காது தவிர்ப்பதும் மற்றும் ஒஸ்திரேலியக் குடிவரவுத் திட்டத்தின் நேர்மையைக் காப்பதுமாகும்.

நீங்கள் வீசா இல்லாமல் படகில் ஏறினால் நீங்கள் ஆஸ்திரேலியாவைச் சென்றடைய முடியாது.

### சிரியா மற்றும் ஈராக் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த 12000 அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கு ஆஸ்திரேலியா தன்னை அர்ப்பணித்துள்ளது. இது ஆஸ்திரேலியா அரசாங்கக் கொள்கை இலகுவாக்கப்பட்டுள்ளதாகப் பொருள்படுமா?

இல்லை. சிரியா, ஈராக் மோதல்களால் வெளியேறும் அகதிகளை மீள்குடியேற்றம் செய்வதற்கான ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் அறிவிப்பானது, சட்டவிரோதமாக படகில் ஆஸ்திரேலியாவுக்குப் பயணிக்க எத்தனிக்கும் ஆட்களைத் தடுத்து நிறுத்தும் ஆஸ்திரேலியாவின் கொள்கையில் ஏந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

UNHCRஇல் பதிவுசெய்துகொண்டு தற்போது லெபனான், ஜோர்டான், துருக்கி போன்ற நாடுகளில் உள்ள அகதிகளுக்காக மேலதிக மனிதாபமான இடங்கள் உள்ளன. சட்டவிரோதமாகப் படகில் ஆஸ்திரேலியாவுக்கு வரும் எவருக்கும் இந்த இடங்கள் வழங்கப்படமாட்டாது.

ஆஸ்திரேலியா தனது எல்லைகளைப் பாதுகாபபதற்குத் தொடர்ந்தும் உறுதிபூண்டுள்ளது. சட்டவிரோதமாகப் படகில்வர எத்தனிக்கும் எவரையும், தடுத்து நிறுத்துவது தொடர்ச்சியாக நீடிக்கும்- அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பது பொருட்டல்ல.

## ஆஸ்திரேலியாவில் புதிய பிரதமர் வந்திருக்கிறார். இதனால் ஆஸ்திரேலியாவுக்கு விசா இல்லாமல் வருபவர்களுக்கு என்ன நடக்கும்?

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமரின் மாற்றம், படகுகளைப் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்புதல், அல்லது செயலாக்கம் மற்றும் மீள்குடியேற்றத்திற்காக மக்ககளை வேறு நாடுகளுக்கு இடமாற்றம் செய்யும் ஆஸ்திரேலியாவின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தாது.

ஆஸ்திரேலியாவின் கடற் பிரதேசத்திற்குள் பிரவேசிக்க அல்லது ஆஸ்திரேலிய கடற்பிராந்தியத்தினூடாக நியூசீலந்துக்கு பயணிக்க எத்தனிக்கும் எந்தவொரு ஆட்கடத்தும் படகும் இனம் காணப்பட்டு, தடுத்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்படும்.

மனுஸ் (பப்புவா நியூகினி), ஆஸ்திரேலியாவிலுள்ள நாஉரு ஆகிய நாடுகளில் மீள்குடியேற்றம் இடம்பெறாதென பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார்- அவர்கள் ஒருபோதும் ஆஸ்திரேலியாவுக்கு வரமாட்டார்கள்.

## படகுகள் இப்பவும் ஆஸ்திரேலியாவை வெற்றிகரமாகச் சென்றடைவதாக நான் கேள்விப்பட்டேன். இது உண்மையா?

இல்லை. மக்களைக் கடத்துபவர்களின் பொய்களை நம்பாதீர்கள். ஒரே ஒரு படகு மாத்திரம் 2014 இல் ஆஸ்திரேலியாவை அடைந்தது. அத்துடன், அந்தப் படகிலிருந்த ஒவ்வொருவரும் நாஉரு நாட்டுக்கு செயல்முறைக்காக இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.

## இந்தோனேசியாவிலிருந்து மீள்குடியேற்றத்திற்கு என்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன?

இந்தோனேசியாவிலிருந்துவரும் அகதிகளுக்கான அகதிகள் மீள்குடியமர்வு விதிகளை ஆஸ்திரேலியா அரசாங்கம் மாற்றிவிட்டது.

நீங்கள் யூஎன்எச்சீஆர் இல் பதிவு செய்வதற்காக இந்தோனேசியாவுக்குப் பயணித்தால், ஆஸ்திரேலியாவில் மீள்குடியேற்றத்திற்காக ஆலோசிக்கப்படமாட்டீர்கள்.

விதிகள் எல்லோருக்கும் பொருந்தும் விதிவிலக்குகள் கிடையாது.

## 1 யூலை 2014 க்கு முன்னர் இந்தோனேசியாவில் யூ என் எச் சி ஆர் உடன் நான் ஏற்கனவே பதிவை மேற்கொண்டிருந்தால் நிலைமை என்ன?

1 யூலை 2014 க்கு முன்னர் இந்தோனேசியாவில் யூ என் எச் சி ஆர் உடன் பதிவு செய்துள்ள சில அகதிகளை ஆஸ்திரேலியா தொடர்ந்தும் மீள்குடியேற்றம் செய்யும்.

எவ்வாறாயினும், கூடியளவு இடங்கள் பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது- அதாவது ஆஸ்திரேலியாவில் மீள்குடியேற்றப்படுவதற்காக இந்தோனேசியாவில் காத்திருக்கவேண்டிய காலம் மிக நீண்டதாக இருக்கும்.

## ஆஸ்திரேலியா படகுகளை இந்தோனேசியாவுக்குத் திருப்புவதாக மட்டும் கேள்விப்பட்டேன். இது உண்மையா?

இல்லை. எந்த நாட்டிலிருந்து மக்கள் வருகிறார்கள, எந்த வழியை எடுக்கிறார்கள், அல்லது எந்த நாட்டிலிருந்து வெளியேறுகிறார்கள் என்பது காரியமில்லை. ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகில் பயணம் செய்பவர்களுக்கு இரு வித முடிவுகள் உண்டு.

- அவர்கள் இடைமறிக்கப்பட்டு ஆஸ்திரேலிய கடற்பரப்பிலிருந்து பாதுகாப்பாக அகற்றப்படுவார்கள். அல்லது,
- அவர்கள் பிராந்திய நடைமுறைக்காக இன்னோர் நாட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

## எனது உறவினர்கள் ஒஸ்திரேலியாவில் ஏற்கனவே இருந்தால் அதனால் எனக்கு ஏதாவது சாதகம் உண்டா? எனது உறவினர்கள் ஏற்கனவே வீசா பெற்றவர்களாக அல்லது ஒஸ்திரேலியக் குடியானவர்களாக இருந்தால் அதில் ஏதாவது மாற்றம் உண்டா?

உங்களுக்கு ஒரு குடும்பம் ஏற்கனவே ஒஸ்திரேலியாவிலிருந்தால் அது எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஒஸ்திரேலியாவிற்கு சட்ட விரோதமாக வள்ளத்தில் வர முயற்சிக்கும் யாவருக்கும் சட்டம் ஒரே மாதிரியாகத்தான் அமுலாகும்.

## ஒஸ்திரேலியாவில் குடியமர நான் தகுதியுடையவன் என மக்களைக் கடத்துபவர்கள் என்னிடம் கூறினார்கள்.

மக்களைக் கடத்துபவர்களின் பொய்களை நம்பாதீர்கள். இக் குற்றவாளிகள் உங்கள் பணத்தைச் சூறையாடி உங்களது உயிரையும் உங்களது குடும்பத்தின் உயிர்களையும் ஆபத்தில் தள்ளிவிடுவார்கள்.

நீங்கள் வீசா இன்றி வள்ளத்தில் ஒஸ்திரேலியா வருவீர்களாயின், நீங்கள் சகலதையும் இழக்கும் ஆபத்தைச் சந்திப்பதோடு உங்கள் உயிரையும் உங்கள் குடும்பத்தின் உயிரையும் இழக்கும் ஆபத்தையும் சந்திப்பீர்கள்.

## சட்டவிரோதமாகக் கடல்வழி வந்து சேர்பவர்கள், இடைமறிப்புக்குள்ளாகாது ஒஸ்திரேலிய நிலப்பரப்பை அடைந்தால் என்ன நடக்கும்?

ஆஸ்திரேலியாவின் கடுமையான எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பது படகுகள் வழிமறிக்கப்படாமல் பெருநிலப்பரப்புக்குச் செல்ல முடியாது என்பதாகும்.

மக்கள் ஒஸ்திரேலியாவிற்குச் சட்ட விரோதமாக வர முயற்சித்தால், ஒஸ்திரேலியாவை வதிவிடமாக்க எப்பொழுதுமே முடியாது. ஆஸ்திரேலியாவுக்கான பாதை மூடப்பட்டுள்ளது.

## அந்தக் கொள்கை பெண்கள், குழந்தைகள் மற்றும் கூடிவராத இளவயதினருக்கும் பொருந்துமா?

ஆம். இவ்விதிகள் சகலருக்கும் பொருந்தும்: குடும்பங்கள், பிள்ளைகள், துணையாருமற்ற பிள்ளைகள், கற்றவர்கள், மற்றும் செயல்த்திறமுள்ளவர்கள்.விதிவிலக்குகள் கிடையாது.